அன்னை வயலட் கலை மற்றும்அறிவியல் கல்லூரி

தமிழ்த்துறை

ர்மதிப்பீட்டுத் தேர்வு -II

பாடம்:புறப்பொருள்வெண்பாமாலை

மதிப்பீட்டுத்திட்டம்

வகுப்ப : I பி.ஏ., தமிழ் |

நாள்: 03.11..22. மதிப்பெண்கள்: 75

பாடக்குறியீடு:: AT21B

பகுதி –அ (10X 2 =20மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை யளிக்கவும்

1. மன்னன் ஆணையிட்டப்பிறகு போர்வீரர்கள் ஆநிரைகளைக் கவர்ந்துவருவது(**2**மதிப்பெண்கள்)
2. 

   **ஒற்றர்கள்**பகைநாட்டிற்குச்சென்றுவேவுப்பார்த்தல்(2மதிப்பெ ண்கள்)
3. அரசனால் சிறப்பிக்கப்பட்ட போர்வீரனின் சிறப்பினைக் கூறுவது
4. புண்ணோடுவருதல் துறை (**2** மதிப்பெண்கள்)
5. போரில் அஞ்சு ஓடுபவர் மீது போர்த் தொடுக்காத நிலை (**2** மதிப்பெண்கள்)
6. புண்பட்ட மறவனைப் பேய்த் தீண்ட அஞ்சுவது புண்பட்ட மறவனை

   பேய்த் தொடுவது(2மதிப்பெண்கள்)
7. போர்வீரர்களுக்கு மன்னன் சூடிக்கொள்ளப் பூவினை வழங்குவது (**2** மதிப்பெண்கள்**)**
8. பகைவரால் முற்றுகையிடப்பட்டோர் நொச்சிப் பூவினைச் சூடி தன் மதிலைக் காப்பது
9. மதிலைக் காத்து நிற்கும் நொச்சி வீரர்களின் வீரச் சிறப்பினை எடுத்துக் கூறுவது
10. மன்னன் ஒரு நல்ல நாளில் தன் குடையைப் போருக்கு அனுப்புவது
11. படைவீரர்கள் பகைநாட்டின் புறத்தே தங்குவது (**2** மதிப்பெண்கள்)
12. காந்தள் பூ (**2** மதிப்பெண்கள்)

பகுதி- ஆ (5×5=25 மதிப்பெண்கள் )

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்

13. பகைவரின் ஆநிரைகளை கவரச்செல்லும் வெட்சி மறவர் பல்வகைஇசைக்கருவிகள் முழங்க ஆரவாரித்துச் செல்வர். தான்

மேற்கொள்ளும் செயலின் நிலையை அறியும் பொருட்டு சொல்லை

ஆராய்வர்-(2-மதிப்பெண்கள்)

வெட்சி மறவர் ஆநிரைகளைக் கவரக் கருதி பகைவர் நிலத்திற்கு புறப்பட்டுச் செல்வர். தம் பகைவர் அறியாதவாறு அங்குள்ள ஆநிரைப் பற்றிய செய்திகளை உற்று ஆராய்ந்து வந்து கூறுவர். பகைவரின் அரணைச் சுற்றி வளைத்து புறத்தில் தங்குவர்-(2 மதிப்பெண்)

பகைவரின் மதிலை தீயிட்டு அழித்து ஊரில் உள்ளவரைக் கொல்லுவர். பகைவருடைய பசுக்களைக் கன்றுடன் கவர்ந்து வருவர்-(1 மதிப்பெண்)

14. பகை மறவரின் குடரை வேலுக்கு மாலையாக அணிவித்து வேலைச் சுழற்றி மறவன் ஆடுவது பிள்ளையாட்டு என்னும் துறையாகும்(2-மதிப்பெண்)

கொளு: கூடலர் குடற் மாலைச் சூட்டி

வேல் திரிந்து விரும்பி ஆடின்று-(1-மதிப்பெண்)

தீய நிமித்தத்தை பொருட்படுத்தாது நிறைவேற்றச் சென்றவனுடைய ஆற்றலை அரசன் சிறப்பிப்பது பிள்ளைப்பெயர்ச்சி என்னும் துறையாகும்(2-மதிப்பெண்)

15. வெற்றித் திருவாக விளங்கும் கொற்றவையின் அருளுடைமையை வியந்து பாராட்டிக் கூறுதல்; வஞ்சி மறவரின் போர்த் தொழிலைச் சிறப்பித்துக் கூறுதல் ஆகிய இரண்டும் கொற்றவை நிலை என்னும் துறையாகும்-(2-மதிப்பெண்கள்)

கொளு: நீள்தோளான் வென்றி கொள்க என

நிறைமண்டை வளன் உயரிக்

கூடாரைப் புறம்காணும்

கொற்றவை நிலை உரைத்தன்று (3-மதிப்பெண்கள்)

16. போர்க்களத்தில் செயற்கரும் செயல் செய்து இறந்த மறவனின் தலையைப் பாராட்டுவது தலைக்காஞ்சி என்னும் துறையாகும்(1மதிப்பெண்)

கொளு:மைந்து உயர மறம் கடந்தான்

பைந்தலைச் சிறப்பு உரைத்தன்று (2 மதிப்பெண்)

ஒரு மறவனின் தலையைக் கொண்டு வந்த மற்றொரு மறவனுக்கு காஞ்சி வேந்தன் பெரும்பொருள் கொடுத்துச் சிறப்பிப்பது தலைமாராயம் என்னும் துறையாகும். (2 மதிப்பெண்)

17. புண்பட்டு விழுந்த மறவனைப் பேய் காவல் காப்பது பேய் நிலை என்னும் துறையாகும். அச்சத்தை செய்வது பேயின் தன்மையாகும் அதனை விடுத்து புண்பட்ட மறவனை பிற உயிர்கள் வருத்தா வண்ணம் பேய் காத்த நல்ல இயல்பைக் கூறுவதால் பேய் நிலையாயிற்று(2 மதிப்பெண்கள்)

கொளு; செறுவேலோன் திறம்நோக்கிப்

பிரிவின்றிப் பேய் ஓம்பின்று(2 மதிப்பெண்கள்)

புண்பட்டுக் கிடப்பவனைப் பேய் அச்சுறுத்துவது பேய்க்காஞ்சி என்னும் துறையாகும்(1 மதிப்பெண்)

18. உழிஞை வேந்தனை திருமாலாகக் கொண்டு புகழ்ந்துரைப்பது கந்தழி என்னும் துறையாகும். இது பகைவரின் பற்றுக் கோடாக விளங்கும் மதிலை அழித்தல் என்னும் பொருளைத் தருவதாகும்(2 மதிப்பெண்கள்).

சிவபெருமான் சூடிய உழிஞைப் பூவின் சிறப்பைக் கூறுவது முற்றுழிஞை என்னும் துறையாகும்(1 மதிப்பெண்)

முருகப்பெருமான் சூடிய காந்தள் பூவின் சிறப்பினை எடுத்துரைப்பது காந்தள் என்னும் துறையாகும் இது குறிஞ்சி நிலத்திற்குரிய பூ. ஆகையால் அந்நிலத் தெய்வமாகிய முருகனுக்கு சூடும் பூவாயிற்று(2 மதிப்பெண்கள்)

19. உழிஞை வேந்தன் தான் ஒருவனாக நின்று போர் செய்து அரணைக் கைப்பற்றியது குற்றுழிஞை என்னும் துறையாகும்(1மதிப்பெண்)

கொளு: கருதாதார் மதில் குமரி மேல்

ஒரு தானாகி இகல் மிகுந்தன்று (2 மதிப்பெண்கள்)

உழிஞை வேந்தனின் படை காவல் காட்டைக் கடந்துச் செல்லுதலும் குற்றுழிஞை என்னும் துறையாகும். அப்படை கூத்தாடிக்கொண்டு நொச்சியாரின் கோட்டைக்குள் புகுதலும் குற்றுழிஞையாகும் (2 மதிப்பெண்கள்)

## பகுதி-இ (3×10=30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்

20. வெட்சிப் பூவினைச் சூடி மாற்றாரின் ஆக்களைக் கைப்பற்றக் கருதுவது வெட்சித் திணையாகும். இது மண்ணுறு தொழில் தன்னுறு தொழில் என இருவகைப்படும் பகைவரின் ஆநிரைகளைக் கவரச் செல்லும் வெட்சி மறவர் பல்வகை இசைக்கருவிகள் முழங்க ஆரவாரித்துச் செல்வர்(2 மதிப்பெண்கள்)

தான் மேற்கொள்ளும் செயலின் நிலையை அறியும் பொருட்டுச் சொல்லை ஆராய்வர். அதாவது விரிச்சி கேட்பர். வெட்சி மறவர் ஆநிரைகளைக் கவர கருதி பகை நிலத்திற்குப் புறப்பட்டுச் செல்வர்..(2 மதிப்பெண்கள்)

தம் பகைவர் அறியாதவாறு அங்குள்ள ஆநிரைப் பற்றியச் செய்திகளை ஒற்றர் ஆராய்ந்து வந்து கூறுவர். பகைவரின் அரணத்தைச் சுற்றி வளைத்து புறத்தில் தங்குவர். வெட்சி மறவர் பகைவரின் மதிலை தீயிட்டு அழித்து ஊரில் உள்ளவரைக் கொல்லுவர்(2 மதிப்பெண்கள்)

பிறகு பகைவர்களுடைய ஆக்களைக் கன்றுடன் கவர்ந்து வருவர். எதிர்த்துப் போர் செய்ய வந்தோரை முற்றிலும்

கொன்று இனி போர் இல்லை என்றுச் சொல்லும் படி செய்வர். தம்மால் கவரப்பட்ட ஆநிரைகளுக்கு துன்பம் நேராமல் காட்டு வழிக்கண் ஓட்டிச் செல்வர்(2 மதிப்பெண்கள்)

ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வெட்சி மறவர் பின்னே வர தலைவன் முன்னே வருவான். அதைக் கண்டு ஊர் மக்கள் மகிழ்ச்சி அடைவர். தாம் கைப்பற்றி வந்த ஆநிரைகளை ஊரில் கொண்டு வந்து நிறுத்துவர். வீரர்களுக்கு அதனை பங்கிட்டு கொடுப்பர். வீரர்கள் வெற்றியை கள் உண்டு கொண்டாடுவர்(2 மதிப்பெண்கள்)

வீரர்கள் தமக்குக் கிடைத்த பசுக்களைப் பிறருக்குத் தானமாக கொடுப்பர். ஒற்றர்களுக்குச் சிறப்புச் செய்வர் பிறகு விரிச்சி கூறியவர்களுக்குச் சிறப்புச் செய்வர். பிறகு துடி கொட்டுபவனுடைய குடியைப் புகழ்ந்துப் பாராட்டுவர் .பிறகு வெற்றிக்குக் காரணமாக விளங்கும் கொற்றவைத் தெய்வத்தைப் புகழ்ந்துப் போற்றுவர். இறுதியாக வேலனாக வேடமிட்டு நடனமாடும் மறவனோடுத் தங்களை வள்ளியாக நினைத்துக் கொண்டு பெண்கள் சேர்ந்து நடனமாடுவர். இவ்வாறாக தங்களுடைய வெற்றியைக் கொண்டாடுவர்.

21. வஞ்சிப் பூவினைச் சூடி மாற்றாரின் மண்ணைக் கவரக் கருதி படையெடுத்துச் செல்வது வஞ்சி என்னும் துறையாகும்.

வஞ்சிப் பூவினைச் சூடி அணிவகுத்துச் சென்ற மறவர்கள் ஆரவாரத்துடன் செல்வர். போருக்குப் போகின்ற வஞ்சி அரசன் நல்ல நாளில் தன்னுடைய வெண்கொற்றக் குடையை எடுத்துச் செல்லக் கூறுவான் அது போல் ஒரு நல்ல நாளில்தன்னுடைய வெற்றி வாளைப் புறவீடு விடுவான்(2 மதிப்பெண்கள்).

வெற்றித் திருவாக விளங்கும் கொற்றவையின் அருளுடைமையை வியந்துப் பாராட்டுவார்கள். மேலும் வஞ்சி அரசன் வஞ்சி வீரனின் போர்த்தொழிலைச் சிறப்பித்துக் கூறுவான். வஞ்சிரசனின் வாள்வலிமையைச் சிறப்பித்து மறவர்கள் கூறுவர்.வஞ்சி அரசனின் வெற்றிப் புகழைக் கூறி அவருடைய பகைநாட்டின் அழிவிற்காக மனம் வருந்துவர். பகை வென்ற மறவனை அரசன் பாராட்டிப் பரிசளிப்பான்(2 மதிப்பெண்கள்)

தோல்வியுற்ற பகை அரசனிடம் இருந்து திரைப் பொருளைப் பெற்றுத் தன் நாட்டிற்குத் திரும்புவான் மன்னன். அரசனால் சிறப்பிக்கப்பட்ட வீரனின் சிறப்பினை பிற வீர்கள் கூறுவர். வஞ்சிவீரன் பகைவர்களின் முன்னே தன்னுடைய ஆண்மையைத் தானே புகழ்ந்துக் கூறுவான். வீரன் ஒருவன் தான் பிறந்த குடியின் முதல்வனைப் புகழ்ந்துப் பாடுவான். வஞ்சி மன்னன் பகைவர் நாட்டினை தீயிட்டுக் கொளுத்துவான் ஒரு வீரன் தான் ஒருவனாக நின்றுப் பகை மறவர்களை வெட்டி வீழ்த்திய நிலையை கூறுவான்.

பகைவர் நாட்டுப் பொருள்களைக் கொள்ளையடிப்பான். தனது வெற்றியைப் பாடிய புலவர்க்கு பரிசளிப்பான் (2-மதிப்பெண்கள்)

தன்னை எதிர்த்து போர் செய்ய கருதும் வஞ்சியரசனுக்குப் பகையரசன் பணிந்து வரி செலுத்துவான். வஞ்சியரசனை எதிர்க்கும் ஆற்றல் இன்றி பணிந்து நிற்பான். போர் செய்யாமல் பகைவரைப் பணிய வைத்து வஞ்சியரசன் பாசறைக்கண் தங்கி இருப்பான். தன்னந்தனியாக நின்றுப் பகைவரைத் தடுத்த வஞ்சியரசன் ஒருவனுடைய நிலையைப் பிறர்ப் புகழ்ந்துக் கூறுவர். போரில் அஞ்சி ஓடுபவர் மீது படைத் தொடுக்கமாட்டார்கள்(2 மதிப்பெண்கள்).

பகையரசன் பணிந்தப் பின்னரும் வஞ்சி மன்னன் தம் போர் பாசறைக்கண் தங்கி இருப்பான். வஞ்சிவேந்தன் தன் பகைவர் நாட்டை மறுமுறையும் தீயிட்டு அழிப்பான். வஞ்சிவேந்தன் தன் படை வீரர்களுக்கு பெருஞ்சோற்றை கொடுப்பான் அவனுடைய வெற்றியை வீரர்கள் புகழ்ந்துப் பாடுவர். மன்னன் படையெடுத்துச் சென்று தம் பகைவர் நாட்டின் கண் தங்கி பகைநாடு அழிய காரணமாக இருப்பான்(2 மதிப்பெண்கள்)

22.தன் நாட்டைக் கவரப் படை எடுத்து வரும் வஞ்சியரசனைத் தடுக்க காஞ்சிப்பூவினைச் சூடிப் போருக்குச் செல்லுதல் காஞ்சித்திணை ஆகும். வஞ்சிவேந்தன் படையெடுத்து வர அதனைக் கண்ட தன் வீரர்களின் ஆற்றலை மிகுதியாகச் சொல்லித் தன் வீர்களைப் பெருமைப்படுத்துவான். வஞ்சியரசனின் படை தன் நாட்டின் எல்லையைத் தொடாத படி காத்து நிற்பர் காஞ்சி வேந்தன் தன் படைவீரர்களுக்கு துணைப்படையை வழங்குவான் அரசனிடம் இருந்து படைக்கருவிகளை பெறுவர் வீரர்கள்(2 மதிப்பெண்கள்)

வீரர்கள் போரின் கண் தமது வீரப் பெருமையை வெளிப்படுத்துவர் காஞ்சி அரசன் தன் வாளை போர்க்களத்திற்கு எடுத்துச் செல்லுமாறு கூறுவான் காஞ்சிரசன் தன் குடையை போர்க்களத்திற்கு எடுத்துச் செல்லக் கூறுவான் காஞ்சி மன்னன் சூளுரைப்பான் வீரர்கள் தம் அரசனிடம் இருந்து காஞ்சிப்பூவைப் பெற்றுச் சூடிக்கொள்வர். போர்க்களத்தில் சிறப்பாகப் போர் புரிந்து இறந்த வீரனின் தலையைப் பாராட்டுவர்(2 மதிப்பெண்கள்)

ஒரு வீரனின் தலையைக் கொண்டு வந்த மற்றொரு வீரனுக்கு காஞ்சி வேந்தன் பெரும்பொருள் கொடுத்து சிறப்பிப்பான் இறந்த தலைவனின் தலையைக் கண்டு அவனுடைய மனைவி இறந்து விடுவாள் வஞ்சி வீரன் அஞ்சும்படியாக போர் செய்வதும் ஒரு வீரன் தன்னுடைய புன்னைத்தானேக் கிழித்துக்கொண்டு உயிர் விடுவதும் காஞ்சித் திணையின் சிறப்புகள் ஆகும்(2மதிப்பெண்கள்)

புண்பட்டு விழுந்த மறவனை பேய் காவல் காத்து நிற்கும் புண்பட்டுக் கிடப்பவனை பேய் அச்சுறுத்தும் புண்பட்டுக் கிடப்பவனை பேய்தீண்டும் புண்பட்டுக் கிடந்த வீரனைப் பேய் தீண்ட அஞ்சும் இறந்த வீரனின் புகழைப் பாராட்டி மனம் வருந்துவர்

காஞ்சி மன்னன் தன் வீரர்களுக்கு கள்ளினை வழங்குவான்(2மதகப்பெண்கள்)

கணவனின் இறப்பிற்குப் பின்னர் அவனுடைய மனைவி வாழ அஞ்சுவாள் கணவனை அழித்தக் கருவியால் தன்னைத்தானே மாய்த்துக் கொள்வாள் தன் மகளை கேட்கும் வஞ்சி அரசனோடு காஞ்சி அரசன் போர் செய்வான் காஞ்சி மன்னன் வஞ்சியரசனின் படையை புறமுதுகிட்டு ஓடச் செய்வான்(2 மதிப்பெண்கள்)

23. பகைவரால் முற்றுகையிடப்பட்டோர் நொச்சிப்பூவினைச் சூடி தன்மதிலை காப்பது நொச்சித் திணையாகும் (2 மதிப்பெண்கள்)

உழிஞை மறவர்களுக்குப் புறம் கொடுத்து ஓடாமல் நொச்சி மறவர்கள் போர் செய்வர்(2 மதிப்பெண்கள்)

அரணுக்குப் புறத்தில் உள்ள ஊரின் கண் பகைவரோடு நொச்சியார் போர் செய்வர் பகைவர் உள்ளே நுழைய முடியாதபடி அரணைக் காக்கப் போரிட்டு இறந்த மறவரைப் பாராட்டுவர்(2 மதிப்பெண்கள்)

குதிரை படையின் வீரப் பெருமையைப் பாராட்டிக் கூறுவர் மதிலை காத்து நிற்கும் நொச்சி வீரர்களின் வீரச்சிறப்பினை எடுத்துக் கூறுவர் எயிலைக் காக்கின்ற நொச்சி மறவரைப் பகைவர் வீழ்த்துவர் (2 மதிப்பெண்கள்)

பகைவரால் காவற்படை மறவர் அழிவர் அதனைக் கண்டுப் பிற வீரர்கள் அத்தொழிலை மேற்கொள்வர் தன் மகளை வேண்டும் பகை அரசனுக்கு நொச்சி வேந்தன் பெண் கொடுக்க மறுப்பான்( 2 மதிப்பெண்கள்)

24. பகைவர் நாட்டின் காவல் காட்டையும் அகழியையும் அழித்து கோட்டையைக் கைப்பற்றக் கருதுவது உழிஞைத் திணையாகும் உழிஞை அரசன் நல்ல நாளில் தன் கொற்றக் குடையை போருக்காக அனுப்புவான் அதுபோலவே தன் வெற்றி வாளையும் அனுப்புவான்(2 மதிப்பெண்கள்)

உழிஞைப் பூக்களை அணிவித்து முரசை வழிபடுவர் பகைவரின் அரணத்தைக் கைக்கொள்ளப் படையெடுத்துச் செல்வான் உழிஞை வேந்தனின் புகழை வீரர்கள் பாராட்டுவர் உழிஞை வேந்தனை திருமாலாகக் கொண்டு புகழ்ந்துரைப்பர் சிவபெருமான் சூடிய உழிஞைப் பூவை சிறப்பித்துக் கூறுவர் முருகப் பெருமான் சூடிய காந்தள் பூவின் சிறப்பினை எடுத்துக் கூறுவர்(2 மதிப்பெண்கள்)

பகைவர் நாட்டின் மதிலுக்கு புறத்தே தங்குவர் நொச்சி அரசனுடைய அரண் வலிமையை மறவர் எடுத்துக் கூறுவர் கிடுகு என்னும் போர் கருவிக்கு மாலை அணிவித்து வழிபடுவர் தான் ஒருவனாக நின்று உழிஞை வேந்தன் போர் செய்வான் உழிஞை வேந்தனின் படை காவல் காட்டைக் கடந்துச் செல்லும் அப்படைக் கூத்தாடிக் கொண்டுக் கோட்டைக்குள் போகும்(2 மதிப்பெண்கள்)

உழிஞை வீரர்கள் நொச்சியாரின் காவல் காட்டைக் கடந்து அகழியை அடைவார் அகழிக் கரையில் நொச்சியாரின் வலிமைக் கெட போர்ப்புரிவர் நொச்சியாரின் மதில் மேல் ஏணி சாத்துவர் ஏணி மீது ஏறி செல்வர் மதிலின் மீது குதிப்பர் நொச்சி வீரர்களை வென்று விடுவர் நொச்சி வேந்தனின் முரசினைக் கேட்டு உழிஞை வேந்தன் சினம் கொள்வான் நொச்சியாரின் யானைகளைக் கைப்பற்றுவர் நொச்சி அரசனுக்குத் துணை செய்ய வேற்றரசன் வருவான் நிலத்தை கழுதைப்பூட்டி உழுது கபடி விதைப்பர்(2 மதிப்பெண்கள்)

உழிஞை மன்னனின் வெற்றி வாளைப் புனித நீராட்டுவர் வெற்றிப் பெற்ற உழிஞை மன்னன் தன்னை மணமகனாக் கற்பனை செய்துக் கொள்வான் நொச்சி அரசனின் மகளை விரும்பி உழிஞை அரசன் மதில் புறத்தில் தங்குவான் நொச்சி வேந்தனிடம் இருந்து திறைப் பொருளைப் பெற்றுத் தன் நாட்டிற்கு திரும்புவான் பகைவர் நாடு தன் கீழ் அடிமைப்பட்டு இருப்பதற்காக பாசறைக் கண் தங்கி இருப்பான் உழிஞை வேந்தனின் ஆற்றலைக் கண்ட பகை மன்னன் பலரும் அவனிடம் தஞ்சம் புகுவர்

**தயாரித்தவர்**

**முனைவர் அ.தேனமுது**

**தமிழ்த்துறைப் பேராசிரியர்**